18 வது பெருநகர குற்றவியல் நடுவர் நீதிமன்றம், சைதாப்பேட்டை, சென்னை–15

சி.சி.எண்.581/2024

அரசுதரப்பு சாட்சி 1

| | | |
|---|---|---|
| பெயர் | – | ராஜீ |
| த/பெயர் | – | லட்சுமிபதி |
| வயது | – | 50 |
| தொழில் | – | செக்கியூரிட்டி |
| முகவரி | – | எண்.34/9, புதுத்தெரு, காலடிப்பேட்டை, திருவெற்றியூர், சென்னை. |

**(எதிரி ஆஜர்.)**

// பாரதீய சாக்ஸிய அத்னியம்–ன் படி இன்று 2025ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 18–ம் நாள் என்னால் உறுதி செய்யப்பட்டது //

**முதல் விசாரணை**

ஆஜர் எதிரியை தெரியும். கடந்த 18–12–2023 அன்று எஸ்.ஐ.டி. ஸ்போர்ட்ஸ் பெவிலியன் கேட் அருகில் உள்ள பிளாட்பார்ம்–ல் தன்னுடைய ஆடையயை கழட்டிவிட்டு ஆண் உறுப்பை சுய இன்பம் செய்துக்கொண்டிருந்தார். இந்த தகவலை என்னுடைய பில்டிங் மேனஜ்மெண்ட் இன்ஜினியர் சையத் ரிசப்துல்லா என்பவர் என்னிடம் சொன்னர். நான் உடனே நான் அங்கிருந்த டிரைவரிடம் சொல்லிவிட்டு நானும் காண்காணித்து கொண்டிருந்தேன்.

என்னுடைய பணி நேரம் காலை 07.00 மணி முதல் மாலை 07.00 மணி வரை ஆகும். மீண்டும் ஆஜர் எதிரியை 21–12–2023 அன்று மேற்சொன்ன இடத்தில் நான் பார்த்தேன். ஆஜர் எதிரி அதே செயலை மீண்டும் செய்துக்கொண்டிருந்தார். நான் மற்றும் வேன் டிரைவர்கள் அவரை பிடிக்க முற்பட்டபோது அவர் அங்கிருந்து ஓடிவிட்டார். மறுநாள் மீண்டும் அதே இடத்தில் ஆஜர் எதிரி நின்றிருந்தார். மீண்டும் அதே செயலில் ஈடுபட்டுக்கொண்டிருந்தார். நாங்கள் அவரை கையும், களவுமாக பிடித்து அன்றைய தினமே காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். இதுசம்பந்தமாக நான் கொடுத்த **புகார் அ.த.சா.ஆ.1.** போலீசார் அங்கு வந்து அவரை பிடித்தார்கள். இதுசம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**கு.வி**

**இல்லை.**